மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடுக்குக் குடியிருப்பு சொத்துரிமைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2022) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஇ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2022), மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2022)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 10–5–2022 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் கிராம ஊராட்சிச் செயலாளர்களை பணியிட மாறுதல் செய்வதற்கு வழிவகை செய்கிறது. ஊராட்சி உதவியாளர் என்ற பதவியினை ஊராட்சிச் செயலர் என்று பெயர் மாற்றம் செய்து 500 ரூபாய் ஊதிய உயர்வினை வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

பிற்பகல் 1-45

கிராம ஊராட்சிச் செயலாளர்களுக்கு கால முறை ஊதியம் வழங்கியவர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். தற்போதைய சூழ்நிலையில், ஊராட்சிச் செயலாளர்களின் பங்கானது முக்கியமானது. இதை நோக்கக் காரண விளக்க உரையில் அரசே தெளிவுபடுத்தியுள்ளது. ஓர் ஊராட்சிச் செயலாளர் தேர்வு செய்யப்படும்போது, அவர் அந்த ஊராட்சியிலே வசிப்பவராக இருக்க வேண்டும். அந்த ஊராட்சியில் தகுதியானவர் இல்லாவிட்டால், அதை ஒட்டியுள்ள ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாக உள்ளது. அப்போதுதான், அவர்கள் அந்த ஊராட்சியைப் பற்றி நன்கு அறிந்தவர்களாக இருப்பார்கள். ஊராட்சியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்பதால் இந்த நிபந்தனை விதிக்கப்பட்டது. இதைத்தான், நீங்கள் நோக்கக் காரண விளக்க உரையில் தெளிவுபடுத்தியுள்ளீர்கள்.

இச்சட்டத் திருத்தத்தின்படி, இவர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டால், இவர்கள் தேர்வு செய்யப்பட்டதன் நோக்கமே மாறக்கூடிய சூழ்நிலை உண்டாகக்கூடிய நிலை உருவாகும். ஊராட்சியின் வளர்ச்சிப் பணிகள் பெருமளவில் பாதிக்கப்படும். மேலும், இவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமே வழங்கப்படுகிறது. எனவே, இவர்களைப் பணி மாறுதல் செய்வதற்குக் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத் திருத்தத்தின்படி, இவர்கள் மாவட்டத்திற்குள் ஒரு block-*லிருந்து மற்றொரு* block-*ற்கோ அல்லது வேறு மாவட்டங்களுக்கோ பணியிட மாறுதல் செய்யப்பட்டால், குறைந்தபட்ச ஊதிய விகித சம்பளத்தில் உள்ள இவர்களுக்கு குடும்பம் நடத்துவது என்பது மிகக் கடினமாக*

இருக்கும். மேலும், பல பெண்கள் ஊராட்சிச் செயலாளர்களாக பணியாற்றி வருகிறார்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, இப்பணியிட மாறுதல் சட்டத் திருத்தத்தினை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கருவூலம்மூலம் ஊதியம் பெற வேண்டும் என்று ஊராட்சியாளர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். 2006-2011-ல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சராகவும், இந்தத் துறைக்கு அமைச்சராகவும் இருந்துள்ளார்கள். இதற்கு முன்பு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையில் நாங்கள் ஆட்சியில் இருந்தபோது, இது நிதித் துறையில் discussion-ல் இருந்தது. இதையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் அந்த கிராமத்தைச் சேர்ந்தவராக இருந்தால்தான், அவருக்கு கிராமத்தைப் பற்றி முழுமையாகத் தெரியும், யார், என்னவென்று தெரியும்; அவரை மாற்றிவிட்டீர்களென்றால், ரொம்ப கஷ்டம் என்று கூறினார். Village Administrative Officer-ஐ மாற்றுகிறீர்களே, அது எப்படி? VAO இருக்கிறாரே! அவரை இந்த ஊரிலிருந்து மாற்றி வேறு ஊருக்குப் போடுகிறீர்கள். ஒரு காலத்தில் ஒரே ஊரில் VAO இருப்பார்; கணக்குப் பிள்ளை இருப்பார்; அவருக்கு பட்டா, சிட்டா, அடங்கல் போன்றவை தெரியும்; தாலுகா அலுவலகமெல்லாம் தெரியும். இப்போது, அதுபோன்று யாரும் கிடையாதே! ஏலகிரியில் இருப்பவரை அரக்கோணத்தில் போடுகிறீர்கள். அந்த ஊரின் கிழக்கு, மேற்குகூட அந்த VAO-க்கு தெரியாதே! அது மட்டும் அப்படி? இது மட்டும் இப்படி என்றால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பதில் போதும். மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், ஏதாவது சொல்ல வேண்டுமெனில் சொல்லுங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே பதில் சொல்லிவிட்டார்கள். போதும் என்றால், உட்காருங்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2022 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2022) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அ௬) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசை பகுதி நில அபகரிப்பாளர்கள் மற்றும் காணொலி திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசை பகுதி நில அபகரிப்பாளர்கள் மற்றும் காணொலி திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2022), மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசை பகுதி நில அபகரிப்பாளர்கள் மற்றும் காணொலி திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு